**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4–ஆம் தேதி திங்கட்கிழமை**

**இ.ம.எண்.8/2025 இன்**

**இ.ம.எண்.7/2025 இன்**

**இ.ம.எண்.2/2023 இன்**

**இ.ம.எண்.1/2022 இன்**

**அ.வ.எண்.225/2022**

P.சக்திவேல் ...மனுதாரர்/
மனுதாரர்/
மனுதாரர்/
உரிமை கோருபவர்/
3–ம் நபர்

/எதிர் /

P.யோகநாதன் ...1–ம் எதிர்மனுதாரர்/
1–ம் எதிர்மனுதாரர்/
1–ம் எதிர்மனுதாரர்/
மனுதாரர்/
வாதி

K.வாசு
V.கார்த்தி 2, 3 எதிர்மனுதாரர்கள்/
2, 3 எதிர்மனுதாரர்கள்/
2, 3 எதிர்மனுதாரர்கள்/
எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் இம்மனுவானது கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.–ன், இ.ம.எண்.7/205 மனுவை திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 25.07.2025 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 30.07.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 04.08.2025 |
| மனுதாரருக்காக | : | திரு.M.தமிழ்ச்செல்வன் – வழக்கறிஞர் |
| முதல் எதிர்மனுதாரருக்காக | : | திரு.S.சுதாகர் – வழக்கறிஞர் |
| இரண்டு, மூன்று எதிர்மனுதாரர்களுக்காக | : | R.M.செந்தில் – வழக்கறிஞர் |

**1) மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் மனுதாரர் இ.ம.எண்.2/2023 மனுவில் மனுதாரர். இ.ம.எண்.1/2022 மனுவில் உரிமை கோருவர். அசல் வழக்கில் மூன்றாம் நபர் ஆவார். அசல் வழக்கில் இ.ம.எண்.1/2022 மனுவில் தீர்ப்புக்கு முன் ஜப்தி என்ற உத்தரவின்படி மனு சொத்துக்கள் மனு செய்யப்பட்டது. ஜப்தி செய்த அயிட்டம் 1–ல் ச.எண்.56/1–ல் 2508 சதுர அடிகளும், அயிட்டம் 2–ல் ச.எண்.57/8C1–ல் 1770 சதுர அடிகள் ஆகும். முதல் எதிர்மனுதாரர் அவருடைய சொத்தும் ஜப்தி செய்யப்பட்டுள்ளது என்று கூறி குளித்தலை நில அளவையரிடம் ஆட்சேபனை கடிதம் தெரிவிருத்திருந்தார். ஜப்தி செய்யப்பட்டுள்ள சொத்து வேறு, மனுதாரரின் சொத்து வேறு என்பதை நிரூபணயம் செய்யவும், மனுதாரரின் சொத்து ஜப்தி செய்யப்பட்டிருந்தால், அதனை உரிமை கோருவராகவும் கூறி இ.ம.எண்.2/2023 மனு தாக்கல் செய்து, மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்யாமல் விசாரணை முடிக்கப்பட்டுள்ளதால், மேற்படி மனுவினை மறுதிறவு செய்ய தாக்கல் செய்த இ.ம.எண்.7/2025 மனுவானது நிலுவையில் உள்ளது. மேற்படி மறுதிறவு மனுவில் 17.03.2025 என்பதற்கு பதிலாக 20.06.2025 என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே, இ.ம.எண்.7/2025 மனுவில் உள்ள தேதியினை 20.06.2025 என்று உள்ளதை 17.06.2023 என மாற்ற அனுமதி கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) முதல் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. கடன் தொகை வசூலிக்க அசல் வழக்கு தொடரப்பட்டு, மனு சொத்தை பற்றுகை செய்ய வேண்டி இ.ம.எண்.1/2022 மனு தாக்கல் செய்து, கடந்த 16.09.2022–ம் தேதி அன்று மனு சொத்தை பற்றுகை செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கில் மனுதாரர் செயல்பட்டு வருகிறார். மனுதாரர் தூய்மையான கரங்களுடன் நீதிமன்ற அணுகவில்லை. எனவே, மனுதாரரின் மனுவினை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரியுள்ளார்.

3) இரண்டு, மூன்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

5) மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர் அவரது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

6) எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர் அவரது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

**7) தீர்வு :–**

**(அ)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவின் மனுதாரர் இ.ம.எண்.2/2023 மனுவில் மனுதாரர், இ.ம.எண்.1/2022 மனுவில் உரிமை கோருவர் மற்றும் அசல் வழக்கில் மூன்றாம் நபர் என்றும், அசல் வழக்கில் இ.ம.எண்.1/2022 மனுவில் தீர்ப்புக்கு முன் ஜப்தி என்ற உத்தரவின்படி மனு சொத்துக்கள் மனு செய்யப்பட்டது என்றும், ஜப்தி செய்யப்பட்ட சொத்தில் அயிட்டம் 1–ல் ச.எண்.56/1–ல் 2508 சதுர அடிகளும், அயிட்டம் 2–ல் ச.எண்.57/8C1–ல் 1770 சதுர அடிகள் என்றும், முதல் எதிர்மனுதாரர் அவருடைய சொத்தும் ஜப்தி செய்யப்பட்டுள்ளது என்று கூறி குளித்தலை நில அளவையரிடம் ஆட்சேபனை கடிதம் தெரிவிருத்திருந்தார் என்றும், ஜப்தி செய்யப்பட்டுள்ள சொத்து வேறு, மனுதாரரின் சொத்து வேறு என்பதை நிரூபணயம் செய்யவும், மனுதாரரின் சொத்து ஜப்தி செய்யப்பட்டிருந்தால், அதனை உரிமை கோருவராகவும் கூறி இ.ம.எண்.2/2023 மனு தாக்கல் செய்து, மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்யாமல் விசாரணை முடிக்கப்பட்டுள்ளதால், மேற்படி மனுவினை மறுதிறவு செய்ய தாக்கல் செய்த இ.ம.எண்.7/2025 மனுவானது நிலுவையில் உள்ளது. மேற்படி மறுதிறவு மனுவில் 17.03.2025 என்பதற்கு பதிலாக 20.06.2025 என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே, இ.ம.எண்.7/2025 மனுவில் உள்ள தேதியினை 20.06.2025 என்று உள்ளதை 17.06.2023 என மாற்ற அனுமதி கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், நம்பதகுந்ததாகவும் உள்ளது. தரப்பினர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள பூசல்களை முழுமையாக களைவதற்கும், மேற்படி மனுவில் உரிய தீர்வு முடிவினை எட்டுவதற்கும் மேற்படி திருத்தமானது அவசியமாகும். இம்மனுவை அனுமதிப்பதனால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும், சிரமமும் ஏற்படபோவதில்லை. இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு,

இம்மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

8) **முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :–** இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :–** இல்லை

ஒப்பம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.